www.tntextbooks.in

தமிழ்நாடு அரசு

# முதல் வகுப்பு

## மூன்றாம் பருவம்

### தொகுதி 1

தமிழ்

ENGLISH

விற்பனைக்கு அன்று

**தீண்டாமை மனிதநேயமற்ற செயலும் பெருங்குற்றமும் ஆகும்**

தமிழ்நாடு அரசு
இலவசப்பாடநூல் வழங்கும்
திட்டத்தின்கீழ் வெளியிடப்பட்டது

பள்ளிக் கல்வித்துறை

www.tntextbooks.in

© தமிழ்நாடு அரசு

முதல் பதிப்பு – 2012
திருத்திய பதிப்பு – 2013
மறுபதிப்பு – 2014
(பொதுப் பாடத்திட்டத்தின்கீழ் வெளியிடப்பட்ட முப்பருவ நூல்)

பாடநூல் உருவாக்கமும் தொகுப்பும்

மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம்

கல்லூரிச் சாலை, சென்னை – 600 006.

நூல் அச்சாக்கம்

தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகம்

கல்லூரிச் சாலை, சென்னை – 600 006.

இந்நூல் 80 ஜி. எஸ். எம். மேப்லித்தோ தாளில் அச்சிடப்பட்டுள்ளது.

விலை : ரூ.

வெப் ஆப்செட் முறையில் அச்சிட்டோர் :

பாடநூல் வலைதளம்

www.textbooksonline.tn.nic.in

www.tntextbooks.in

## நாட்டுப்பண்

ஜன கண மன அதிநாயக ஜய ஹே
பாரத பாக்ய விதாதா
பஞ்சாப ஸிந்து குஜராத மராட்டா
திராவிட உத்கல பங்கா
விந்திய ஹிமாசல யமுனா கங்கா
உச்சல ஜலதி தரங்கா
தவ சுப நாமே ஜாகே
தவ சுப ஆசிஸ மாகே
காஹே தவ ஜய காதா
ஜன கண மங்கள தாயக ஜய ஹே
பாரத பாக்ய விதாதா
ஜய ஹே ஜய ஹே ஜய ஹே
ஜய ஜய ஜய ஜய ஹே!

– மகாகவி இரவீந்திரநாத தாகூர்.

## நாட்டுப்பண் – பொருள்

இந்தியத் தாயே! மக்களின் இன்ப துன்பங்களைக் கணிக்கின்ற நீயே எல்லாருடைய மனத்திலும் ஆட்சி செய்கிறாய்.

நின் திருப்பெயர் பஞ்சாபையும், சிந்துவையும், கூர்ச்சரத்தையும், மராட்டியத்தையும், திராவிடத்தையும், ஒரிசாவையும், வங்காளத்தையும் உள்ளக் கிளர்ச்சி அடையச் செய்கிறது.

நின் திருப்பெயர் விந்திய, இமயமலைத் தொடர்களில் எதிரொலிக்கிறது; யமுனை, கங்கை ஆறுகளின் இன்னொலியில் ஒன்றுகிறது; இந்தியக் கடலலைகளால் வணங்கப்படுகிறது.

அவை நின்னருளை வேண்டுகின்றன; நின் புகழைப் பரவுகின்றன.

இந்தியாவின் இன்ப துன்பங்களைக் கணிக்கின்ற தாயே! உனக்கு

வெற்றி! வெற்றி! வெற்றி!

www.tntextbooks.in

# THE NATIONAL ANTHEM

Jana–gana-mana-adhinayaka jaya he
Bharata-bhagya-vidhata.
Punjaba-Sindhu-Gujarata-Maratha-
Dravida-Utkala-Banga
Vindhya-Himachala-Yamuna-Ganga
Uchchhala-jaladhi-taranga
Tava subha name jage,
Tava Subha asisa mage,
Gahe tava jaya-gatha.
Jana-gana-mangala-dayaka jaya he
Bharata-bhagya-vidhata
Jaya he, jaya he, jaya he,
Jaya jaya, jaya, jaya he.

- Rabindranath Tagore.

## SHORT VERSION

Jana-gana-mana-adhinayaka jaya he
Bharata-bhagya-vidhata.
Jaya he, jaya he, jaya he
Jaya jaya, jaya, jaya he.

## AUTHENTIC ENGLISH TRANSLATION OF THE NATIONAL ANTHEM

Thou art the ruler of the minds of all people,
Thou dispenser of India's destiny.
Thy name rouses the hearts of the Punjab, Sind,
Gujarat and Maratha, of Dravid, Orissa and Bengal.
It echoes in the hills of the Vindhyas and Himalayas,
mingles in the music of the Yamuna and Ganges
and is chanted by the waves of the Indian Sea.
They pray for Thy blessings and sing Thy praise
The saving of all people waits in Thy hand,
Thou dispenser of India's destiny.
Victory, Victory, Victory to Thee.

## தமிழ்த்தாய் வாழ்த்து

நீராருங் கடலுடுத்த நிலமடந்தைக் கெழிலொழுகும்
சீராரும் வதனமெனத் திகழ்பரதக் கண்டமிதில்
தெக்கணமும் அதிற்சிறந்த திராவிடநல் திருநாடும்
தக்கசிறு பிறைநுதலும் தரித்தநறுந் திலகமுமே!
அத்திலக வாசனைபோல் அனைத்துலகும் இன்பமுற
எத்திசையும் புகழ்மணக்க இருந்தபெருந் தமிழணங்கே!
தமிழணங்கே!
உன் சீரிளமைத் திறம் வியந்து செயல் மறந்து வாழ்த்துதுமே!
வாழ்த்துதுமே!
வாழ்த்துதுமே!

– 'மனோன்மணியம்' பெ. சுந்தரனார்.

## தேசிய ஒருமைப்பாட்டு உறுதிமொழி

'நாட்டின் உரிமை வாழ்வையும் ஒருமைப்பாட்டையும் பேணிக் காத்து வலுப்படுத்தச் செயற்படுவேன்' என்று உளமார நான் உறுதி கூறுகிறேன்.

'ஒருபோதும் வன்முறையை நாடேன்' என்றும், சமயம், மொழி, வட்டாரம் முதலியவை காரணமாக எழும் வேறுபாடுகளுக்கும் பூசல்களுக்கும் ஏனைய அரசியல் – பொருளாதாரக் குறைபாடுகளுக்கும் அமைதி நெறியிலும் அரசியல் அமைப்பின் வழியிலும் நின்று தீர்வு காண்பேன்' என்றும் நான் மேலும் உறுதியளிக்கிறேன்.

## உறுதிமொழி

இந்தியா எனது நாடு. இந்தியர் அனைவரும் என் உடன் பிறந்தவர்கள். என் நாட்டை நான் பெரிதும் நேசிக்கிறேன். இந்நாட்டின் பழம்பெருமைக்காகவும் பன்முக மரபுச் சிறப்புக்காகவும் நான் பெருமிதம் அடைகிறேன். இந்நாட்டின் பெருமைக்குத் தகுந்து விளங்கிட என்றும் பாடுபடுவேன்.

என்னுடைய பெற்றோர், ஆசிரியர்கள், எனக்கு வயதில் மூத்தோர் அனைவரையும் மதிப்பேன்; எல்லாரிடமும் அன்பும் மரியாதையும் காட்டுவேன்.

என் நாட்டிற்கும் என் மக்களுக்கும் உழைத்திட முனைந்து நிற்பேன். அவர்கள் நலமும் வளமும் பெறுவதிலேதான் என்றும் மகிழ்ச்சி காண்பேன்.

www.tntextbooks.in

## INVOCATION TO GODDESS TAMIL

Bharat is like the face beauteous of Earth clad in wavy seas;

Deccan is her brow crescent-like on which the fragrant 'Tilak' is the blessed Dravidian land.

Like the fragrance of that 'Tilak' plunging the world in joy supreme reigns Goddess Tamil with renown spread far and wide.

Praise unto 'You, Goddess Tamil, whose majestic youthfulness, inspires awe and ecstasy.'

## THE NATIONAL INTEGRATION PLEDGE

"I solemnly pledge to work with dedication to preserve and strengthen the freedom and integrity of the nation."

"I further affirm that I shall never resort to violence and that all differences and disputes relating to religion, language, region or other political or economic grievances should be settled by peaceful and constitutional means."

## A STUDENT'S VOW BEFORE MOTHER INDIA

Name :

Class : School :

I shall overcome the obstacles raised by caste and communal prejudices and work for the greatness of my Motherland putting to the fullest use the benefits that I derive through education.

Vande mataram!

Signature

www.tntextbooks.in

# பொருளடக்கம்

## தமிழ் (1 - 46)


| பாடம் | தலைப்பு | பக்கம் |
|---|---|---|
| 1. | ஏலேலோ ஜலசா | 5 |
| 2. | வௌவாலே வௌவாலே! | 20 |
| 3. | நத்தையம்மா | 31 |


## ENGLISH (47 - 88)


| Unit | Topic | Page No. |
|---|---|---|
| 1. | Crossing the Road | 49 |
| 2. | People who help us | 60 |
| 3. | At the Beach | 70 |
| 4. | Picture Dictionary | 84 |

www.tntextbooks.in

www.tntextbooks.in



# தமிழ்

## முதல் வகுப்பு

### மூன்றாம் பருவம்

www.tntextbooks.in

தமிழ்

## அன்பு ஆசிரியர்களே!

ஒரு குழந்தை, தன்னையும் தன் சுற்றுப்புறத்தையும் புரிந்துகொள்வதில், மொழி பெரும் பங்காற்றுகிறது. அதுமட்டுமன்றி கற்றலுக்கு அடிப்படையாக இருப்பதுவும் மொழியே. குழந்தை தனது தாய்மொழியில் வளம்பெறவும், பல்வேறு உள்ளார்ந்த திறன்களை வெளிக்கொணரவும், மேலும் மொழியை வளர்த்தெடுக்க உதவுகிற வகையில் இத்தமிழ்ப் பாடநூல் உருவாக்கப்பட்டுள்ளது.

குழந்தைகளுக்குக் கற்றல் இயல்பாக நிகழ்வதற்குப் பல்வேறு கற்றல் அணுகுமுறைகளிருப்பினும் செயல்பாடுகளின்மூலம் கற்றல் என்பது சிறப்பிடம் பெறுகிறது. இதனைக் கருத்திற்கொண்டே இப்பாடநூல் உருவாக்கப்பட்டுள்ளது. இப்பாடநூலில் ஆசிரியர் வழிகாட்டுதலோடு குழந்தை தானாகக் கற்பதற்கு முன்னுரிமை அளிக்கப்பட்டுள்ளது. மேலும் தனியாகச் செயல்படுவது, இருவராக இணைந்து செயல்படுவது, குழுவில் இணைந்து செயல்படுவது எனக் குழந்தைகளின் கற்றல் இயல்புக்கு ஏற்றவாறு செயல்பாடுகள் கொடுக்கப்பட்டுள்ளன. மேலும் தொடர் மற்றும் முழுமையான மதிப்பீட்டை உள்ளடக்கி இந்நூல் உருவாக்கப்பட்டுள்ளது.

### நினைவுகூர்வோம்

- இரண்டு பருவங்களில் கற்றவற்றைத் தொடர்புபடுத்திக்கொள்ள, இப்பகுதி குழந்தைக்கு உதவும்.
- அனைத்துப் படங்களின் பெயர்களையும் எழுத வேண்டும் என வற்புறுத்தாமல், ஒளிந்துள்ள படங்களை, நண்பருடன் இணைந்து கண்டுபிடித்து எழுத ஊக்குவிக்கலாம்.
- – ஆகப் பயன்படுத்தலாம்.

### படம் பார்த்துப் பேசுக

- படங்களைப் பார்த்துத் தங்கள் கற்பனைகளைச் சேர்த்துத் தடையின்றிப் பேசும்திறனை குழந்தை பெறும்.
- குழந்தைகள் படங்களைப் பார்த்துக் கதையாகவோ, தங்கள் அனுபவத்தை இணைத்து நிகழ்வாகவோ கூறச்செய்யலாம்.
- – ஆகப் பயன்படுத்தலாம்.

### நானே படிப்பேன்; நானே எழுதுவேன்

- அறிந்த எழுத்துகளைக் கொண்ட புதிய சொற்களைத் தாங்களாகவே எழுத்துக்கூட்டிப் படிக்கவும், எழுதவும் கூடிய திறனைக் குழந்தை பெறும்.
- எழுத்து வரிசையிலுள்ள அனைத்து எழுத்துகளும் குழந்தைக்கு நன்கு அறிமுகம் ஆகும் வரை, எழுத்தட்டைகளைத் தொடர்வண்டிபோல் அடுக்கி விளையாடும்.
- குறில், நெடில் எழுத்துகளைக்கொண்டு தொடங்கும் புதிய சொற்களை இணைத்துக் கற்கும்போது, அவ்வெழுத்து வரிசைகள், குழந்தையின் மனத்தில் நன்கு பதியும்.
- – ஆகப் பயன்படுத்தலாம்.

### நாங்கள் படிப்போம்...

- எளிய படக்கதைகளைத் தாங்களாகவே படித்து மகிழும் ஆர்வத்தைக் குழந்தை பெறும்.
- படக்கதைகளைப் படித்து, அக்கதையைக் குழந்தை கூறவோ, நடித்துக்காட்டவோ, பொம்மலாட்டமாக நிகழ்த்தவோ செய்யலாம்.
- – ஆகப் பயன்படுத்தலாம்.



www.tntextbooks.in

**நான் பாடலைப் பாடுவேன்**

எளிய பாடலைப் பாடுவதனால், குழந்தை, கற்பனையாற்றலையும் படைப்பாற்றலையும் பெறும்.

- பாடலில் செடி, கொடி, மரம் இவற்றோடு வேறு எதனை இணைத்துக் குழந்தை பாடினாலும் வரவேற்று ஊக்கப்படுத்தலாம்.
- – ஆகப் பயன்படுத்தலாம்.

**படக்கதைகள்**

குழந்தை, எளிய படக்கதைகளைப் படிக்கும் ஆர்வம் பெறுவதனோடு, நகைச்சுவை உணர்வையும், வாழ்க்கைக்குத் தேவையான திறன்களையும் பெறும்.

- கதைகளைப் படித்துத் தங்கள் கற்பனையில் கதையை மாற்றியோ, நீட்டித்தோ கூறும்படி ஊக்குவிக்கலாம்.
- – ஆகப் பயன்படுத்தலாம்.

**விளையாடலாம் வாங்க**

- விளையாட்டுகளின்மூலம் குழந்தையானது உற்றுக்கவனித்தல், ஒருங்கிணைந்து சிந்தித்தல், கூட்டு மனப்பான்மை, போலச் செய்தல் முதலிய திறன்களைப் பெறும்.
- 'சிறிய பானை பெரிய பானை', 'நத்தை முயல் பருந்து' விளையாட்டுகளின்போது, வகுப்பறைக்கு வெளியே, குழந்தைகளைப் பெரிய வட்டத்தில் நிற்கச் செய்து, நடுவில் ஆசிரியர் நின்று, குறிப்புகள் கூறி விளையாடச் செய்யலாம்.
- 'கண்ணாடி முன்னாடி' விளையாட்டு, வகுப்பறைக்கு உள்ளேயே, இருவர் இருவராக இணைந்து விளையாடச் செய்யலாம். குழந்தைகளின் கற்பனைக்கு ஏற்ப, விளையாட்டை மாற்றியமைத்தும் விளையாடச் செய்யலாம்.
- – ஆகப் பயன்படுத்தலாம்.

**கலையும் கைவண்ணமும்**

- குழந்தைகள் தங்கள் விருப்பப்படி வண்ணங்களைத் தேர்ந்தெடுத்து ஓவியங்கள் தீட்டுவதற்கு வாய்ப்பளிக்கலாம். பொம்மைகள் செய்யும்போது, தங்கள் சொந்தக் கற்பனைக்கு ஏற்ப மாற்றியமைத்துச் செய்வதற்குக் குழந்தைகளுக்கு வாய்ப்பளிக்கலாம்.
- – ஆகப் பயன்படுத்தலாம்.

பாடநூலை, உயரிய நோக்கத்தில் உருவாக்கி இருப்பினும், அதனை வகுப்பறையில் செயல்படுத்திக் கற்பிப்போர் ஆசிரியர்களே. எனவே, நீங்கள், இந்நூல் உருவாக்கப்பட்டதன் நோக்கத்தையும், எதிர்பார்ப்பையும் நன்கு உணர்ந்து செயலாற்றுவீர்கள் என நம்புகிறோம். வளமிக்க வருங்காலத் தலைமுறையை உருவாக்க எண்ணும் உங்களுக்கு, இந்நூல் ஒரு வழிகாட்டியாக இருக்கும் என நம்புகிறோம்.

அன்புடன்,
ஆக்கியோர்.



www.tntextbooks.in

தமிழ்

| திறன் | திறன் பகுதி | பாடப்பகுதி |
|---|---|---|
| பார்த்தறிதல் | படங்களைப் பார்த்துப் பெயர்களைக் கூறுதல் | 1. ஏலேலோ ஐலசா ...<br>2. வெளவாலே வெளவாலே<br>3. நத்தையம்மா |
| கேட்டல் | ஓசை நயமிக்க குழந்தைப் பாடல்களைக் கேட்டல் | 1. ஏலேலோ ஐலசா ...<br>2. வெளவாலே வெளவாலே<br>3. நத்தையம்மா |
| பேசுதல் | படத்தைப் பார்த்துத் தன் கருத்தைக் கூறுதல்<br>கதை கூறுதல்<br>எளிய பாடல்களைப் பாடுதல் | 1. ஏலேலோ ஐலசா ...<br>2. வெளவாலே வெளவாலே<br>1. ஏலேலோ ஐலசா ...<br>1. ஏலேலோ ஐலசா ... |
| படித்தல் | அறிந்த எழுத்துகள் அமைந்த சொற்களைப் படித்தல்<br>அறிந்த எழுத்துகளை அடையாளப்படுத்துதல் | 1. ஏலேலோ ஐலசா ...<br>2. வெளவாலே வெளவாலே<br>1. ஏலேலோ ஐலசா ...<br>2. வா மழையே வா ... |
| எழுதுதல் | நேர்கோடு, வளைகோடு, சாய்வுகோடுகளை வரைதல்<br>அறிந்த எழுத்துகளை எழுதுதல் | 1. ஏலேலோ ஐலசா ...<br>2. வெளவாலே வெளவாலே |
| படைப்பாற்றல் | படங்களுக்குப் பொருத்தமான வண்ணம் தீட்டுதல் | 1. ஏலேலோ ஐலசா ...<br>2. வெளவாலே வெளவாலே |
| நடைமுறை இலக்கணம் | ஒத்த ஓசையுடைய சொற்களை இனங்காணல் | 1. ஏலேலோ ஐலசா ...<br>2. வெளவாலே வெளவாலே<br>3. நத்தையம்மா |
| சொல்லாட்சித் திறன் | சொற்களஞ்சியம் பெருக்குதல் | அனைத்தும் |

www.tntextbooks.in

# ஏலேலோ ஐலசா...




ஏலேலோ ஏலேலோ ஏலேலோ ஐலசா
ஏலேலோ ஏலேலோ ஏலேலோ ஐலசா

வாழை மரத்தாலே என் படகு – ஐலசா
என் படகு – ஐலசா

வாகாகச் செய்தேனே என் படகு – ஐலசா
என் படகு – ஐலசா

தென்னை மரத்தாலே என் படகு – ஐலசா
என் படகு – ஐலசா

தேர்ந்தெடுத்துச் செய்தேனே என் படகு – ஐலசா
என் படகு – ஐலசா

தேக்கு மரத்தாலே என் படகு – ஐலசா
என் படகு – ஐலசா

தேடித் தான் செய்தேனே என் படகு – ஐலசா
என் படகு – ஐலசா

வேகமாகப் போகுமே என் படகு – ஐலசா
என் படகு – ஐலசா

வேண்டுமெனில் ஏறிக்கோ என் படகில் – ஐலசா
என் படகில் – ஐலசா.




www.tntextbooks.in

# நினைவுகூர்வோம்

## இணைந்து செய்வோம்

### படம் பார்த்துப் பெயர் எழுதுக




எடுத்துக்காட்டு:

| | |
|---|---|
| காளான் | |
| | |
| | |
| | |
| | |

www.tntextbooks.in



## ஊர்வலம் போவோமா ?



- படத்திலுள்ளவை பற்றிக் குழந்தைகளைப் பேசச் செய்யவும்.
- குழந்தைகளுக்குத் தெரிந்த எ, ஏ, ஐ வரிசை எழுத்துகளில் தொடங்கும், பொருள்களின் பெயர்களைக் கூறச் செய்யவும்.



www.tntextbooks.in



## நான் சொல்வேன்



எலி



செங்கல்



நெல்



ஏணி



தேர்




சேவல்

படங்கள் ஒட்டிய சொல் அட்டைகளைக் குழந்தையிடம்
கொடுத்துச் சொற்களை அறிமுகப்படுத்தவும்.

எ ஏ செ சே

## வரைந்து காட்டுவேன்



சிவப்பு வண்ணமிட்ட இடத்திலிருந்து தொடங்கவும்.

## எழுதிப் பழகுவேன்

எ எ எ எ எ எ எ

ஏ ஏ ஏ ஏ ஏ ஏ ஏ

## படம் பார்த்துப் பெயர் எழுதுவேன்



எலி

எலி எலி எலி எலி எலி எலி



ஏணி

ஏணி ஏணி ஏணி ஏணி ஏணி



நெல்

நெல் நெல் நெல் நெல்



தேர்

தேர் தேர் தேர் தேர்

www.tntextbooks.in

# நானே படிப்பேன்; நானே எழுதுவேன்



| எ | கெ | ஙெ | செ | ஞெ | டெ | ணெ | தெ | நெ | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| பெ | மெ | யெ | ரெ | லெ | வெ | ழெ | ளெ | றெ | னெ |

| ஏ | கே | ஙே | சே | ஞே | டே | ணே | தே | நே |  |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| பே | மே | யே | ரே | லே | வே | ழே | ளே | றே | னே |

| | | | |
|---|---|---|---|
| எருது | ஏணி | வெல்லம் | வேலி |
| தெரு | தேர் | மெழுகு | மேகம் |
| பெட்டி | பேருந்து | கெண்டி | கேடயம் |

நேரு மாமா வந்தார்

முள்வேலி இருந்தது

மர ஏணி பாருங்கள்

தேனீ கூடு கட்டும்

## இணைந்து செய்வோம்

★ சொல்லின் இறுதி எழுத்தோடு மற்றொரு சொல்லின் முதல் எழுத்தை இணைக்க; உருவாகும் வடிவத்துக்கு வண்ணமிடுக.

சிலந்தி

குருவி • விருது

துளசி • திருகு

www.tntextbooks.in

## சொல்வதனைக் கேட்டு எழுதுவேன்

| | | |
|---|---|---|
| கப்பல் | | |
| | | |
| | | |

ஆசிரியர், குழந்தை அறிந்த சொற்களைக் கூறி, அவற்றை எழுதச் சொல்லவும்.

## கலையும் கைவண்ணமும்

பூசணி விதைகளுக்கு வண்ணமிட்டு, உனக்குப் பிடித்த வடிவங்களை உருவாக்கி மகிழ்க.




www.tntextbooks.in



# இப்படி இருந்தால்...





வீட்டுக்குச்
சக்கரங்கள் இருந்தால்...!



மரத்துக்குக்
கால்கள் இருந்தால்...!



எனக்குச்
சிறகுகள் இருந்தால்...!

படத்திலுள்ள சொற்றொடர்களைக் குழந்தையைப் படிக்கச் சொல்லவும்.
படத்திலுள்ளவை பற்றிக் கற்பனை செய்து கூறச் சொல்லவும்.

www.tntextbooks.in

# வா... மழையே... வா



கத்திக் கப்பல் செய்து வைத்தேன்
கால்வாய் கூடத் தோண்டி வைத்தேன்
வா மழையே வா
வா மழையே வா
சின்னச் செடியை நட்டு வைத்தேன்
செப்புக் குடத்தை எடுத்து வைத்தேன்
வா மழையே வா
வா மழையே வா
வீதிப் பக்கம் வந்து நின்றேன்
மேலே மேலே பார்த்து நின்றேன்
வா மழையே வா
வா மழையே வா

– அழ. வள்ளியப்பா



மழை, உனக்குப் பிடிக்குமா, ஏன் ?
உன் ஆசிரியருடன் பகிர்ந்துகொள்.

www.tntextbooks.in



## நான் சொல்வேன்

5

ஐந்து



குடை



கை



தவளை



வாழை




யானை

படங்கள் ஒட்டிய சொல் அட்டைகளை உருவாக்கிக் குழந்தைகளிடம் கொடுத்துச் சொற்களை அறிமுகப்படுத்தவும்.

ஐ கை

## வரைந்து காட்டுவேன்



சிவப்பு வண்ணமிட்ட இடத்திலிருந்து தொடங்கவும்.

www.tntextbooks.in



## எழுதிப் பழகுவேன்

ஐ ஐ ஐ ஐ ஐ ஐ

கை கை கை கை கை கை

## படம் பார்த்துப் பெயர் எழுதுவேன்

| | |
|---|---|
| 5 | ஐந்து<br>ஐந்து ஐந்து ஐந்து ஐந்து |
|  | கை<br>கை கை கை கை கை |
|  | குடை<br>குடை குடை குடை குடை |
|  | யானை<br>யானை யானை யானை |

www.tntextbooks.in

தமிழ்

# நானே படிப்பேன்; நானே எழுதுவேன்






| | | | |
|---|---|---|---|
| குதிரை | மதுரை | விலை | இலை |
| ஐயம் | ஐவர் | மழை | தழை |
| பனை | பானை | கடை | குடை |



வாழை இலையில் சாப்பிட்டேன்

குதிரை கனைத்தது



## நான் பாடல் பாடுவேன்

மழையே மழையே வா! வா!
மல்லிகைச்செடி நான் காத்திருக்கேன்.
மழையே மழையே வா! வா!
கொய்யாமரம் நான் காத்திருக்கேன்.
மழையே மழையே வா! வா!
..................................................
மழையே மழையே வா! வா!
..................................................
மழையே மழையே வா! வா!
..................................................



www.tntextbooks.in

நாங்கள் படிப்போம்...

# மழை



ஐ! மழை



குளிருதே!



என்ன அது?



ஐ! என் குடை




உன்னிடம் குடை இல்லையா?




இருவரும் செல்வோம்...

**படத்திலுள்ள சொற்களைக் குழந்தையைப் படிக்கச் சொல்லவும்; படத்தைப் பார்த்துக் கதையாகக் கூறச் செய்யவும்.**

## வேறுபட்டதனைக் கண்டுபிடித்து வட்டமிடுக





## பொம்மை செய்து மகிழ்வோம்



**கலையும் கைவண்ணமும்**




வாழைப்பழ ஆக்டோபஸ்



கத்தரிக்காய்ப் பொம்மை

www.tntextbooks.in

## குறும்புக்காரக் குரங்கு



படங்களைப் பார்த்துக் குழந்தையின் விருப்பப்படி கதைகூறச் செய்க.

www.tntextbooks.in





# 2 வௌவாலே வௌவாலே!

வௌவாலே வௌவாலே!
வட்டமிடும் வௌவாலே
என்ன செய்கிறாய் ? நீ
என்ன செய்கிறாய் ?

தம்பியே தம்பியே!
சுட்டியான தம்பியே
தேடிப் பறக்கிறேன் – உணவைத்
தேடிப் பறக்கிறேன்.

வௌவாலே வௌவாலே!
வட்டமிடும் வௌவாலே
என்ன தின்னுவாய் ? நீ
என்ன தின்னுவாய் ?

தங்கையே தங்கையே!
சுட்டியான தங்கையே
பழம் தின்னுவேன்– நான்
பழம் தின்னுவேன்.





## குழுவாகச் செய்வோம்

விளையாடலாம் வாங்க!



### சிறிய பானை பெரிய பானை

குழந்தைகளை, அரைவட்டமாக நிற்கச் செய்தல் வேண்டும். ஆசிரியர், பெரிய பானை என்றவுடன், குழந்தைகள், சிறிய பானைபோலக் கைகளைக் குவித்தல் வேண்டும். சிறிய பானை என்றவுடன், கைகளை சற்று விரித்துப் பெரிய பானைபோலக் காட்டுதல் வேண்டும். மாற்றிச் செய்தவர்களை விளையாட்டிலிருந்து வெளியேற்றுதல் வேண்டும். இவ்வாறு தொடர்ந்து விளையாடச் செய்க.

www.tntextbooks.in




- படத்திலுள்ளவைபற்றிக் குழந்தையைப் பேசச் செய்யவும்.
- குழந்தைக்குத் தெரிந்த ஒ, ஓ, ஔ வரிசை எழுத்துகளில் தொடங்கும் பொருள்களின் பெயர்களைக் கூறச் செய்யவும்.



# நான் சொல்வேன்



ஒட்டகம்



கொய்யா



பொங்கல்



ஓடம்



மக்காச்சோளம்



மோதிரம்

படங்கள் ஒட்டிய சொல் அட்டைகளை உருவாக்கிக் குழந்தையிடம் கொடுத்துச் சொற்களை அறிமுகப்படுத்தவும்.

ஒ ஓ கொ கோ

# வரைந்து காட்டுவேன்





சிவப்பு வண்ணமிட்ட இடத்திலிருந்து தொடங்கவும்.

www.tntextbooks.in

## எழுதிப் பழகுவேன்

ஒ ஒ ஒ ஒ ஒ ஒ ஒ ஒ ஒ

ஓ ஓ ஓ ஓ ஓ ஓ ஓ ஓ ஓ

## படம் பார்த்துப் பெயர் எழுதுவேன்

| | |
|---|---|
|  | **ஒட்டகம்**<br>ஒட்டகம் ஒட்டகம் ஒட்டகம் |
|  | **கொய்யா**<br>கொய்யா கொய்யா கொய்யா |
|  | **ஓடம்**<br>ஓடம் ஓடம் ஓடம் ஓடம் |
|  | **சோளம்**<br>சோளம் சோளம் சோளம் |

www.tntextbooks.in



# நானே படிப்பேன்; நானே எழுதுவேன்

ஒ கொ ஙொ சொ ஞொ டொ ணொ தொ நொ

பொ மொ யொ ரொ லொ வொ ழொ ளொ றொ னொ

ஓ கோ ஙோ சோ ஞோ டோ ணோ தோ நோ

போ மோ யோ ரோ லோ வோ ழோ ளோ றோ னோ

ஒன்று ஓணான் தொட்டி தோகை

கொடி கோழி பொம்மை போட்டி

சொல் சோளம் மொட்டு மோர்

மொட்டு மலர்ந்தது

மாடு ஓடியது

கோழி கொத்தித் தின்னும்



## இணைந்து செய்வோம்

## சொற்கோபுரம்

வண்ண எழுத்துகளைக் கட்டங்களில் நிரப்புக.

‘அமுதா... வயலுக்குப் போ!’ என்றார் அப்பா.

வயலில், கோழி

குப்பையைக் கிளறிக் கொண்டிருந்தது.

சோளம் விளைந்திருந்தது.

வழியில் கோபுரம் பார்த்தாள்.

பொன்வண்டு பறந்தது.

மரங்கொத்தி

ஒலி எழுப்பியது.

பார்த்து மகிழ்ந்தாள்.




## நான் நிரப்புவேன்

நான் [ ][ ][ ][ ] அணிந்தேன். 

அணில் [ ][ ][ ] தின்றது. 

 நான் [ ][ ][ ][ ] சாப்பிட்டேன்.



## கலையும் கைவண்ணமும்

### வண்ணம் தீட்டுவேன்





www.tntextbooks.in

தமிழ்

# நான் சொல்வேன்


ஔவை


கௌதாரி


பௌர்ணமி


வௌவால்

படங்கள் ஒட்டிய சொல் அட்டைகளைக்
குழந்தையிடம் கொடுத்துச் சொற்களை அறிமுகப்படுத்தவும்.

# ஔ கௌ

## குழுவாகச் செய்வோம்

### விளையாடலாம் வாங்க!

#### கண்ணாடி முன்னாடி

எதிரெதிரே இரு குழந்தைகளை நிற்கச் செய்து, இருவரில் ஒருவரைக் கண்ணாடியாகவும், மற்றவரைக் குழந்தையாகவும் நினைத்துக் கொள்ளச் செய்க. குழந்தை செய்யும் செயலைக் கண்ணாடியாக நிற்பவரை எதிரொளிக்கச் செய்க.

www.tntextbooks.in

## எழுதிப் பழகுவேன்

ஔ ஔ ஔ ஔ ஔ

ஔ ஔ ஔ ஔ ஔ

ஔ ஔ ஔ ஔ ஔ

## படம் பார்த்துப் பெயர் எழுதுவேன்.



ஔவை

ஔவை ஔவை ஔவை



வௌவால்

வௌவால் வௌவால்



பௌர்ணமி

பௌர்ணமி பௌர்ணமி

தமிழ்

www.tntextbooks.in

தமிழ்

## நானே படிப்பேன்; நானே எழுதுவேன்



| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| ஔ | கௌ | ஙௌ | சௌ | ஞௌ | டௌ | ணௌ | தௌ | நௌ | |
| பௌ | மௌ | யௌ | ரௌ | லௌ | வௌ | ழௌ | ளௌ | றௌ | னௌ |

பௌர்ணமி
கௌதம்
ஔவை

பௌத்தம்
கௌதாரி
வௌவால்



கௌதாரி பறந்தது


ஔவைப் பாட்டி

பௌர்ணமி நிலா அழகு




### கலையும் கைவண்ணமும்

### மறைந்துள்ளவற்றை வண்ணமிட்டுக் கண்டுபிடிக்க



இணைந்து செய்வோம்

## விடுபட்டக் கட்டங்களை நிரப்புவேன்




படம் பார்த்துப் பெயர் எழுதுக. வண்ணக் கட்டங்களில் உள்ள எழுத்துகளை, அருகில் உள்ள வெற்றுக் கட்டங்களில் நிரப்புக.











www.tntextbooks.in

சிந்திக்கலாமா ?

# மல்லிக்கு என்னாச்சு ?




மல்லிக்கு ஏன் பசிக்கவில்லை. மல்லி நன்றாகச் சாப்பிட என்ன செய்யலாம் ? குழந்தையிடம் உரையாடவும்.



# 3. நத்தையம்மா



நத்தையம்மா நத்தையம்மா
எங்கே போகிறாய் ?
அத்தை குளிக்க தண்ணீர்க் குடம்
கொண்டு போகிறேன்
எத்தனைநாள் ஆகும் அத்தை
வீடு செல்லவே ?
பத்தே நாள் தான்; வேணு மானால்
பார்த்துக் கொண்டிரு...

– அழ. வள்ளியப்பா



குழுவாகச் செய்வோம்

## விளையாடுவோம்

- வகுப்பறைக்கு வெளியே பெரிய வட்டமிட்டு, அவ்வட்டத்தினுள் குழந்தைகளை நிற்கச் செய்யவும்.
- நத்தை என ஆசிரியர் கூறும்போது, குழந்தைகளை மிக மெதுவாகவும், முயல் எனக் கூறும்போது மிக விரைவாகவும், பருந்து எனக் கூறும்போது பக்கவாட்டில் கைகளை நீட்டியவாறும், வட்டத்தைவிட்டு விலகாமல் நடக்கச் செய்யவும்.

www.tntextbooks.in



## கலையும் கைவண்ணமும்

# வண்ணம் தீட்டி மகிழ்க

வு



## சிந்திக்கலாமா ?

## வீட்டில் பேசுவோம்



அப்பா... இன்று கடைத்தெருவில் பெருங்கூட்டம்



அம்மா... எனக்கு இன்று நிறைய இரை கிடைத்தது



அம்மா... வரும் வழியில் என் நண்பனைப் பார்த்தேன்.



இன்று என் பள்ளியில்...

# அகரவரிசை அறிவோம்

அ அணில்


எ எறும்பு


ஆ ஆமை


ஏ ஏழு 7

இ இறகு


ஐ ஐந்து 5

ஈ ஈ


ஒ ஒன்று 1

உ உழவர்


ஓ ஓநாய்


ஊ ஊசி


ஔ ஔவை


ஃ எஃகு

க கண் 

கா காகம் 

கி கிளி 

கீ கீரி 

கு குரங்கு 

கூ கூண்டு 

கெ கெண்டி 

கே கேடயம் 

கை கை 

கொ கொக்கு 

கோ கோழி 

கௌ கௌதாரி 


www.tntextbooks.in

தமிழ்

# அகரவரிசையில் எழுதுவோம்




| | | | | | |
|---|---|---|---|---|---|
| அன்னம் | ஊஞ்சல் | ஏற்றம் | ஐவர் | ஓணான் | எறும்பு |
| இலை | ஆடு | உறி | ஈட்டி | ஔவை | ஒட்டகம் |



# புதிய ஆத்திசூடி



அனைவரும் உறவினர்.

ஈதல் இன்பம்.

ஒற்றுமை அமைதி.

கல்லார் நலிவர்.

கெடு நினைவு அகற்று.

சோர்வு நீக்கு.

தூய நீராடு.

தெருவெலாம் மரம் வளர்.

வெறும் பேச்சுப் பேசேல்.

வையம் வாழ வாழ்.

– பாவேந்தர் பாரதிதாசன்



## சொல்லும் பொருளும்

ஈதல் – கொடுத்தல்; இன்பம் – மகிழ்ச்சி; நலிவர் – துன்பம் அடைவர்; கெடு நினைவு – கெட்ட எண்ணம்; அகற்று – நீக்கு; சோர்வு – சோம்பல்; வெறும் பேச்சு – பயனற்ற பேச்சு; பேசேல் – பேசாதே; வையம் – உலகம்.



## குழுவாகச் செய்வோம்

- குழந்தைகளைச் சிறுசிறு குழுக்களாகப் பிரிக்கவும்.
- ஒவ்வொரு குழுவுக்கும் ஐந்து அல்லது ஆறு எழுத்துகளைக் கொடுக்கவும்.
- எழுத்துகளைப் பயன்படுத்திச் சொற்களை உருவாக்கச் சொல்லவும்.
- குறித்த நேரத்தில், மிகுதியான சொற்களை உருவாக்கிய குழுவைப் பாராட்டவும்.

www.tntextbooks.in

# சொல்லுங்க! சொல்லுங்க!

சொல்லுங்க சொல்லுங்க சொல்லுங்க
தமிழ் மாதங்கள் பன்னிரண்டைச் சொல்லுங்க
சித்திரை, வைகாசி, ஆனி,
ஆடி, ஆவணி, புரட்டாசி,
சொல்லுங்க சொல்லுங்க சொல்லுங்க
அடுத்து வருவதனைச் சொல்லுங்க
ஐப்பசி, கார்த்திகை, மார்கழி,
தை, மாசி, பங்குனி
அப்படி நீங்களும் சொல்லுங்க
ஆடிப் பாடிச் சொல்லுங்க.

## மாதங்கள் எழுதுவோம்

| | |
|---|---|
| சித்திரை | ஐப்பசி |
| ---------- | ---------- |
| ---------- | ---------- |
| ஆடி | தை |
| ---------- | ---------- |
| ---------- | ---------- |

www.tntextbooks.in

தமிழ்

# சுவை அறிவோம்

அம்மாவைப் போல் நாமும்
உணவைத் தேடலாமா ?




துவர்ப்பு துவர்ப்பு!



புளிப்பு புளிப்பு!



கசப்பு கசப்பு!




உவர்ப்பு உவர்ப்பு!



ஆ, கார்ப்பு கார்ப்பு!



ஐ, இனிப்பு இனிப்பு!



இக்கதையில் வரும் கதைமாந்தர்களை ஏற்று நடிக்கச் செய்யவும்.

## இணைந்து செய்வோம்

### சுவை கூறுவோம்; எழுதுவோம்!



..........................



..........................



..........................



..........................




..........................



..........................

# கிழமைகள் அறிவோம்

ஆமைத்தம்பி, தன் வீட்டிற்குச் செல்லும் வழியில் எந்தெந்த நாளில் யார் யாரையெல்லாம் சந்தித்தான் எனக் கேட்கலாமா?




வாரத்தின் முதல் நாள் __________ பள்ளி தொடங்கும் நாள் __________ வாரத்தின் நாள்கள் __________

www.tntextbooks.in



## ஓசையோடு சொல்வேன்



சலசல என
இலைகள் அசைகின்றன.

குளுகுளு எனக்
காற்று வீசுகிறது.

கடகட என
வண்டி ஓடுகிறது.

சடசட என
மழை பெய்கிறது.

கலகல எனக்
குழந்தை சிரிக்கிறது.

## பொருத்துவேன்! சொல்லிப் பழகுவேன் !

| | |
|---|---|
| குளுகுளு | மழை |
| சலசல | வண்டி |
| சடசட | இலைகள் |
| கலகல | காற்று |
| கடகட | சிரிப்பு |

www.tntextbooks.in

# வண்ணங்கள் அறிவோம்


சிவப்பு


மஞ்சள்



நீலம்

பச்சை


ஊதா



வெள்ளை


கறுப்பு

நிறம்

## மிட்டாய்களின் வண்ணங்களை எழுதுவேன்



நீலம்

.................................

.................................

.................................

.................................

www.tntextbooks.in

சிந்திக்கலாமா ?

# பாப்பாவைத் தேடி




**குழந்தைகள் இக்கதையைப் படித்துப் பொம்மலாட்டமாக நடிக்க உதவவும்.**

www.tntextbooks.in

புகைப்படம்

# என்னைப் பற்றி...

என் பெயர் : ..............................

நான் படிக்கும் வகுப்பு : ..............................

அப்பா பெயர் : ..............................

அம்மா பெயர் : ..............................

அண்ணன் பெயர் : ..............................

அக்காள் பெயர் : ..............................

தம்பி பெயர் : ..............................

தங்கை பெயர் : ..............................

தாத்தா பெயர் : ..............................

பாட்டி பெயர் : ..............................

நண்பன் பெயர் : ..............................

ஊர்ப் பெயர் : ..............................

விருப்பமான வண்ணம் : ..............................

விருப்பமான விளையாட்டு : ..............................

www.tntextbooks.in



## தமிழ் எழுத்துகள் வரிசை

| ஃ | அ | ஆ | இ | ஈ | உ | ஊ |
|---|---|---|---|---|---|---|
| க் | க | கா | கி | கீ | கு | கூ |
| ங் | ங | ஙா | ஙி | ஙீ | ஙு | ஙூ |
| ச் | ச | சா | சி | சீ | சு | சூ |
| ஞ் | ஞ | ஞா | ஞி | ஞீ | ஞு | ஞூ |
| ட் | ட | டா | டி | டீ | டு | டூ |
| ண் | ண | ணா | ணி | ணீ | ணு | ணூ |
| த் | த | தா | தி | தீ | து | தூ |
| ந் | ந | நா | நி | நீ | நு | நூ |
| ப் | ப | பா | பி | பீ | பு | பூ |
| ம் | ம | மா | மி | மீ | மு | மூ |
| ய் | ய | யா | யி | யீ | யு | யூ |
| ர் | ர | ரா | ரி | ரீ | ரு | ரூ |
| ல் | ல | லா | லி | லீ | லு | லூ |
| வ் | வ | வா | வி | வீ | வு | வூ |
| ழ் | ழ | ழா | ழி | ழீ | ழு | ழூ |
| ள் | ள | ளா | ளி | ளீ | ளு | ளூ |
| ற் | ற | றா | றி | றீ | று | றூ |
| ன் | ன | னா | னி | னீ | னு | னூ |

www.tntextbooks.in

| எ | ஏ | ஐ | ஒ | ஓ | ஔ |
|---|---|---|---|---|---|
| கெ | கே | கை | கொ | கோ | கௌ |
| ஙெ | ஙே | ஙை | ஙொ | ஙோ | ஙௌ |
| செ | சே | சை | சொ | சோ | சௌ |
| ஞெ | ஞே | ஞை | ஞொ | ஞோ | ஞௌ |
| டெ | டே | டை | டொ | டோ | டௌ |
| ணெ | ணே | ணை | ணொ | ணோ | ணௌ |
| தெ | தே | தை | தொ | தோ | தௌ |
| நெ | நே | நை | நொ | நோ | நௌ |
| பெ | பே | பை | பொ | போ | பௌ |
| மெ | மே | மை | மொ | மோ | மௌ |
| யெ | யே | யை | யொ | யோ | யௌ |
| ரெ | ரே | ரை | ரொ | ரோ | ரௌ |
| லெ | லே | லை | லொ | லோ | லௌ |
| வெ | வே | வை | வொ | வோ | வௌ |
| ழெ | ழே | ழை | ழொ | ழோ | ழௌ |
| ளெ | ளே | ளை | ளொ | ளோ | ளௌ |
| றெ | றே | றை | றொ | றோ | றௌ |
| னெ | னே | னை | னொ | னோ | னௌ |

# ‘என்னால் முடியும், நான் செய்தேன்’

## ('I can, I did')

### மாணவர்கள் கற்றல் செயல்பாடுகள் பதிவேடு

பாடம் :

| வ. எண் | நாள் | பாட எண் | பாடத்தலைப்பு | செயல் பாடுகள் | குறிப்புரை |
|---|---|---|---|---|---|
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |